1992 மார்ச் 16]

கூட குத்தகைதாரர்களிடம் விட்டுவிடுகிறார்கள். 2 வேளைக்கு சாப்பாடு போட்டால் போதும் என்று படிக்கின்ற வயதிலுள்ள ஆண், பெண் இருபாலரையும் விவசாய முதலாளிகளிடத்தில் விட்டு விடுகிறார்கள். அவர்கள் இதனால் படிக்காத சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, குறிப்பிட்ட 15 ஆண்டு காலம் கட்டாயம் இளம் வயதில் இருக்கிற சிறார்களை விவசாயக் கூலிகளாக நிரந்தரமாக வைத்துப் பயன்படுத்தக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிப்பார்களா? அதுமட்டுமல்ல, விவசாயக் கூலிகள் இறக்கின்ற நேரத்தில் குறைந்தது 50 ஆயிரம் ரூபாயாவது தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரிய விவசாயிகளிடத்தில் இவர்கள் நிரந்தரமாக இருக்கிற காரணத்தால் அரசாங்கம் தருகிற 10 ஆயிரம் ரூபாயோடு இவர்களிடமிருந்தும் 10 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.45

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர்களை வேலைக்கு வைக்கக் கூடாது என்பது தனி உத்திரவு. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விவசாயத் தொழிலாளர்கள் என்கிற போது, விவசாயத் தொழிலாளர்கள் எங்கே இருந்தாலும் அரசு கொடுக்கிறது. ஆனால் தனியாரிடத்தில் வேலை செய்கிற போது ஆபத்து ஏற்பட்டால், தனியாரிடத்திலிருந்தும் பெறுவதற்கு அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 221 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

221—

கைத்தொழில் பாடத்தை தேர்விற்குரிய பாடமாக்கல்.

*924 திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கைத்தொழில் பாடத்தை தேர்விற்குரிய பாடமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1992 மார்ச் 16

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கைத்தொழில் பாடத்தை தேர்வுக்குரிய பாடமாக ஆக்காத காரணத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. அமைச்சரவர்கள் 'இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலிக்க இயலுமா? 'இல்லை' என்பதற்கான காரணத்தையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு வைக்காததால் எந்த மோசமான விளைவுகளும் ஏற்படக்கூடுமென்று எனக்குத் தெரியவில்லை. எந்தவிதமான விளைவுகளும் ஏற்படாதென்றுதான் கருதுகிறேன். தேர்வு நடக்காது, அவ்வளவுதான். அந்தத் தேர்விலே மார்க் போட மாட்டார்கள்; அந்த மார்க்கை ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்குப் பாஸ் போடும் போது கணக்கிலே எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதைத் தவிர வேறு தவறான விளைவுகள் எதுவும் ஏற்படாது. தேர்வு இல்லாத காரணத்தால் அந்த பாடங்களைச் சரியாக நடத்தாமல் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் தேர்வு இல்லை. பிளஸ் 2 வகுப்புகள் நடக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் வொகேஷனல் கல்வி என்று சொல்லி தொழில் கல்வி அளிக்கிறோம். அதிலே தேர்வு இருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு இல்லாத காரணத்தால் அந்தப் பாடங்களைச் சரியாக நடத்துவதே இல்லை. அவர்களுக்குச் சரியாக படிக்க வேண்டுமென்ற எண்ணமும் வருவது இல்லை. ஆகவேதான் அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மேலும், நடுநிலைப் பள்ளிகளில் நீண்ட பல ஆண்டுகளாகப் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே உத்தரவிடப்பட்டும், அது நடைமுறைக்கு வரவில்லை. சென்ற ஆட்சிக் காலத்தில், அது எம்.ஜி.ஆர். அவர்கள் போட்ட உத்தரவு என்பதால் அதற்கு மூடு விழா பண்ணி விட்டார்கள். ஆனால், ஜி.ஓ. உயிரோடு இருக்கிறது. மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடக்கிற காரணத்தால், அதைப் பரிசீலனை செய்து, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை முழுநேர ஆசிரியர்களாக்க அரசிடம் கருத்துரு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமான பரிசீலனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

1992 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எம்.ஏ., பி.ஏ., படித்துவிட்டு பலர் வேலையில்லாமல் இருக்கின்ற காரணத்தாலே, எஜுகேஷனல் கரிகுலத்தையே மாற்றி, ஜாப் ஓரியண்டட் கல்வியை உடனடியாகத் தமிழகத்திலே கொண்டுவர தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தை தேசிய அளவிலே மாற்றம் செய்ய, கொள்கை அறிவித்து, அதற்கான எல்லா விளக்கங்களும் தரப்பட்டு, கடந்த 4, 5 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே இதற்கெல்லாம் இடமிருக்கிறது. மாணவர்கள் அதை எடுத்துப் படிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விச் சாலைகளிலே நடைபெறுகின்ற தொழிற் கல்விக்கு மத்திய அரசு பல கோடி ரூபாயை நிதியாகத் தந்த போதிலும் கூட, அந்த ஆசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படாமலும், ஊதியம் வழங்கப்படாமலும் இருக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, கைத் தொழில் பாடத்தைத் தேர்வுக்குரிய பாடமாக ஆக்குவது பற்றியது. நீங்கள் ஆசிரியர்களை நிரந்தரம் ஆக்குவது பற்றிக் கேட்பது இதிலே துணைக் கேள்வியாக அமையாது. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தொழில் பாடமானது பல பள்ளிகளிலே ''வொகேஷனல் டிரெயினிங்'' என்று கொடுக்கப்படுகிறது. வொகேஷனல் டிரெயினிங் சொல்லிக் கொடுப்பவர்கள் அந்த வேலையிலிருந்து விடுபடும்போது, மீண்டும் அந்தப் பதவிக்கு யாரையும் போடாமல் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்து, உடனுக்குடன் கைத்தொழில் ஆசிரியர்களை நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இல்லாது இருக்கிற, காலியாக இருக்கிற பணியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்கிற கருத்துரு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வி, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் கேட்டிருப்பது, நடுநிலைப் பள்ளிகளில் நாம் கைத்தொழில் பாடம் என்று வைத்து இருக்கிறோம், அந்தப் பாடத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தேர்வு உண்டா என்று கேட்டிருக்கிறார். தேர்வு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 222, திரு. வே. தம்புசாமி—இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் கேட்கிறார்.—மாண்புமிகு கல்வி அமைச்சர். இது திரு. வே. தம்புசாமியினுடைய தொகுதி சம்பந்தப்பட்டது.

222—

திருவாரூரில் பெண்களுக்குத் தனிக் கல்லூரி.

*1521 திரு. வே. தம்புசாமி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் நகரத்தில் பெண்களுக்கு தனிக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனை அரசு பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ? அதாவது 5,000-க்கு மேற்பட்ட பெண்கள் இருக்கிற ஒரு தொகுதியில்,...